# சுருக்கமான தகவல் தாள் – தடைசெய்யப்பட்ட பொருட்கள் சட்டம்

இந்த உண்மைத் தாள் குடிவரவுத் திருத்தம் (குடிவரவுத் தடுப்புச் சட்டத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்கள்) சட்டம் ***2024*** பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. குடிவரவுத் திருத்தச் சட்டம் 2024 அல்லது குடிவரவுத் திருத்தம் (அகற்றுதல் மற்றும் பிற நடவடிக்கைகள்) சட்டம் 2024 பற்றிய தகவலுக்கு, எங்கள் மற்றஉண்மைத் தாளை பார்க்கவும்.

## புதிய சட்டம் என்ன செய்கிறது?

இந்தப் புதிய சட்டம் ஆஸ்திரேலியாவில் தடுப்பு மையங்களில் உள்ளவர்களை பின்வருமாறு பாதிக்கலாம்:

- தடுப்புக்காவல் நிலையத்தின் நலன், அல்லது பாதுகாப்பிற்கு ஏற்படும் ஆபத்தைத் தடுக்க அல்லது குறைக்க அவசியம் என்று நம்பினால், சோதனை செய்ய, தடைசெய்யப்பட்ட பொருட்களை (உதாரணம்: அலைபேசிகள், **SIM** அட்டைகள், கணினிகள் அல்லது பிற மின்னணு சாதனங்கள், அத்துடன் சில மருந்துகள்) திரையீட்டு சோதனை செய்ய மற்றும் பறிமுதல் செய்ய ஒரு தடுப்புக்காவல் அதிகாரியின் அதிகாரத்தை விரிவுபடுத்துதல்.

  நடைமுறையில், நீங்கள் உங்கள் தொலைபேசியை சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பயன்படுத்துகிறீர்கள் என்று அதிகாரிகள் நம்பினால், அவர்கள் அதை உங்களிடமிருந்து பறிமுதல் முடியும் என்பதே இதன் பொருள்.

- எந்தவொரு பொருளையும் "தடைசெய்யப்பட்ட பொருள்" என்று வரையறுக்கும் அதிகாரமும் அமைச்சருக்கு உண்டு - இதில் ஏற்கனவே சட்டவிரோதமான விடயங்கள் அடங்கும், ஆனால் தடுப்பு மையத்தில் உள்ள மக்களின் நலன் அல்லது பாதுகாப்பிற்கு அல்லது "மையத்தின் ஒழுங்கிற்கு" ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அமைச்சர் கருதும் எந்தவொரு பொருளும் அடங்கும்.[1]

- ஒருவர் தடைசெய்யப்பட்ட பொருளை வைத்திருப்பதாக ஓர் அதிகாரி சந்தேகித்தால், ஆடைகளை அவிழ்த்து சோதனை செய்வதற்கான அடிப்படையை விரிவுபடுத்துகிறது.[2]

- விரிவாக்கப்பட்ட பகுதித் தேடல்கள் - அதிகாரிகள் நபர்களின் அறைகள், அவர்களின் தனிப்பட்ட உடைமைகள், பொதுவான பகுதிகள் மற்றும் மருத்துவ பரிசோதனை அறைகளில் கூட தடைசெய்யப்பட்ட பொருட்களைத் தேட முடியும்.[3] இதைச் செய்ய அவர்கள் பலத்தைப் பயன்படுத்த முடியும், மேலும் அவர்களுக்கு உதவ நாய்கள்[4] அல்லது வெளிப்புற நபர்களைக் கொண்டு வரலாம்.[5]

## இது எனக்கு என்ன விளைவுகளைக் கொண்டுவரும்?

'தடைசெய்யப்பட்ட விடயம்' எது என்பதை அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை. இதன் பொருள் மேலே விவரிக்கப்பட்ட இந்தப் புதிய அதிகாரங்கள் எதுவும் இந்தச் சட்டத்தின் கீழ் தற்போது

பயன்படுத்தப்படக்கூடாது. என்னென்ன பொருட்களை எடுத்துச் செல்லலாம் என்பதைப் பார்க்க, புதுப்பிக்கப்பட்ட தகவலுக்கு எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும். அரசாங்கம் முடிவு செய்யும்போது , தொலைபேசிகளை எடுத்துச் செல்லலாமா இல்லையா என்பதை அறிய, நீங்கள்:

- உங்கள் சட்டப்பிரதிநிதிகளுடனும் வெளி உலகத்துடனும் நீங்கள் தொடர்பு கொள்ள, உங்கள் தொலைபேசியை அணுக முடியாமல் போனால், உங்கள் வழக்கறிஞர்/அன்பானவர்களின் விவரங்களை எழுதி வைப்பது மற்றும்/அல்லது உங்களுடன் தடுப்புக் காவலில் உள்ளவருக்கு வழங்குவது பற்றி பரிசீலிக்கவும்.

- இந்தப் புதிய சட்டத்தின் விளைவாக உங்கள் அலைபேசி (மொபைல் போன்) பறிமுதல் செய்யப்பட்டால், உங்கள் சட்டப்பூர்வ பிரதிநிதி மற்றும் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள வேறு வழியை அணுக உங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.[6]

  நீங்கள் உடனடியாக மாற்றுத் தொடர்பு வழிகளைக் கோர வேண்டும். உங்கள் தொலைபேசி அல்லது வேறு உடைமையைத் தற்காலிகமாக உங்களிடம் திருப்பித் தருமாறும் நீங்கள் கோரலாம். அதிகாரி உங்களிடம் பொருளைத் திருப்பித் தர வேண்டிய அவசியமில்லை, ஆனால் கோரப்பட்ட காலத்திற்கு அல்லது குறைந்த காலத்திற்கு அதை உங்களிடம் திருப்பித் தரலாம்.[8]

- உங்கள் தொலைபேசி அல்லது பிற பொருள் எடுக்கப்பட்ட நேரம், இடம் மற்றும் அந்தப் பொருளை எடுத்துச் சென்றதற்கான காரணம் ஆகியவற்றைப் பதிவு செய்யுங்கள். தயவுசெய்து அந்த அதிகாரியின் பெயரையும் குறித்துக்கொள்ளவும்.

- ஒரு பொருளைப் பறிமுதல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால், தடைசெய்யப்பட்ட பொருளை உங்களிடம் திருப்பித் தர வேண்டும். நீங்கள் எங்கு உள்ளீர்கள் எனக் கண்டுபிடிக்கப்படாவிட்டால் அல்லது நீங்கள் காவலில் இல்லாவிட்டாலே அன்றி, அந்தப் பொருள் உங்களிடம் திருப்பித் தரப்பட வேண்டும்.[9]

## சட்ட உதவியை நான் எங்கே பெறலாம்?

நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் மற்றும் நற்பெயர் பெற்ற இடங்களிலிருந்து ஆலோசனை பெறுவது முக்கியம். நீங்கள் இலவச சட்ட உதவிக்காக கீழே உள்ள நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளலாம், டிசம்பர் மாத இறுதியில் மற்றும் ஜனவரி மாத தொடக்கத்தில் நிறுவனங்களுக்கு குறைந்த வளங்கள் மட்டுமே இருக்கும் என்பதால், ஒரு வழக்கறிஞருடன் பேசப் புத்தாண்டு வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| நிறுவனம் | அவர்கள் எவருக்கு உதவ முடியும்? | தொடர்பு விபரங்கள் |
|---|---|---|
| புகலிடம் கோருவோர் வள மையம் | நீங்கள்:<br>• ஆஸ்திரேலியாவில் ஒரு குடிவரவுத் தடுப்பில் உள்ளீர்கள்; அல்லது<br>• விக்டோரியாவில் உள்ள சமூகத்தில் வசிக்கின்றீர்கள்; அல்லது • அண்மையில் குயின்ஸ்லாந்தில் அல்லது மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள தடுப்புக்காவலில் இருந்து சமூகத்தில் விடுவிக்கப்பட்டனர் அல்லது<br>மற்றும்<br>• பிறந்த நாட்டிற்குத் மீண்டும் செல்லும்போது தீங்கு ஏற்படும் என்ற அச்சம் கொண்டவர். | மின்னஞ்சல்: legal@asrc.org.au. தடுப்புக்காவலில் உள்ளவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளில், மின்னஞ்சல் கோரிக்கைகளுக்கு மட்டுமே நாங்கள் பதிலளிப்போம் என்பதை நினைவில் கொள்க.<br><br>தொலைபேசி அல்லது நேரில் வருகை தரல்:<br>• நேரம்: திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி காலை 10 மணி முதல் மதியம் 12.30 மணி வரை (புதன்கிழமைகளில் மூடப்படும்) • தொலைபேசி: (03) 9274 9889<br>• முகவரி: 214-218 Nicholson Street, Footscray VIC 3011 |
| Legal Aid (லீகல் எய்ட்) NSW | நீங்கள்:<br>• நியூ சவுத் வேல்ஸில் (தடுப்புக்காவல் அல்லது சமூகத்தில்) உள்ளீர்கள்; அல்லது<br>• தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளீர்கள், மற்றும் தடுத்து வைக்கப்படுவதற்கு முன்பு நியூ சவுத் வேல்ஸில் வசித்து வந்தீர்கள். | தொலைபேசி: (02) 9219 5790 |
| அகதிகள் ஆலோசனை விடய மேலாண் மை சேவை (RACS) | நீங்கள்:<br>• நியூ சவுத் வேல்ஸ் அல்லது நார்தேன் டெரிடெரியில் இல் சமூகத்தி வசிக்கிறீர்கள்; அல்லது<br>• யோங்கா ஹில் குடிவரவு தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். | மின்னஞ்சல்: admin@racs.org.au |
| Refugee Legal | நீங்கள்:<br>• ஒரு குடிவரவுத் தடுப்பில் உள்ளீர்கள்; அல்லது<br>• விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் நார்தேன் டெரிடெரியில் சமூகத்தில் வசிக்கிறீர்கள். | மின்னஞ்சல்: admin@refugeelegal.org.au |

## வேறு எங்கிருந்து எனக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும்?

அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் சேவை வழங்குநர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீட்டுவசதி ஏற்பாடு செய்தல் மற்றும் மெடிகேர் (சுகாதாரப் பராமரிப்பை அணுக) மற்றும் சென்ட்ரெலிங்கிற்கு விண்ணப்பிக்க உதவுதல் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட ஆதரவை வழங்குகிறார்கள். நீங்கள் குறுகிய கால SRSS (நிலைத் தீர்மான ஆதரவு சேவைகள்) பெறவும் தகுதி பெறுவீர்கள்.

கீழே உள்ள சேவை வழங்குநர்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் என்ன உதவிகளை வழங்க இயலும் என்பதை அறியலாம்.

உங்களுக்கு ஏற்கனவே ஒரு விடைய மேலாளர் (caseworker) இருந்தால், அவர்களால் வழங்கப்பட்ட தொடர்பு விவரங்களில் அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளப் பரிந்துரைக்கப்படுகிறது.

| நிறுவனம் | தொடர்பு விபரங்கள் |
|---|---|
| Life Without Barriers | மின்னஞ்சல்: info@lwb.org.au<br>தொலைபேசி:<br>• சன்ஷைன் (VIC) அலுவலகம்: (03) 9245 2701<br>• டான்டெனாங் (VIC) அலுவலகம்: (03) 8752 8500<br>• அவசரநிலைகளுக்கு வேலை நேரத்திற்குப் பிறகு (மாலை 5 மணி முதல் காலை 9 மணி வரை): 1800 861 862 |
| Settlement Services International (SSI) | அஞ்சல்: srss.intake@ssi.org.au<br>தொலைபேசி:<br>• திங்கள் முதல் வெள்ளி வரை: (02) 9685 0100<br>• அவசரநிலைகளுக்கு வேலை நேரத்திற்குப் பிறகு (வார நாட்களில் மாலை 5 மணி முதல் காலை 9 மணி வரை & வார இறுதி நாட்கள்): (02) 1800 774 142 |

[1] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 251A.
[2] குடிவரவுச் சட்டம் 1958 (பொதுநலவாயம்), s 251A.
[3] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 251A.
[4] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 252BA.
[5] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 252BB.
[6] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 251AB.
[7] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 251AA(4).
[8] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 251AA(5).
[9] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 251AA(6).